செல்வமுடையவனாய் இருந்தான். அவன் பெயர் போவாஸ். தன் மாமியாரின் அனுமதியுடன் வயல்வெளியில் அறுத்தபின் கிடக்கும் தானியங்களைப் பொறுக்கி வந்து இருவரும் சமைத்துச் சாப்பிடுவார்கள். போவாஸ் ரூத்தைப் பார்த்தான். தன் வேலைக்காரர்களிடம் அவளைப் பற்றி விசாரித்து, அவளின் நிலை உணர்ந்து உதவிக்கரம் நீட்டினான். தானியங்களை பொறுக்காமல் அங்கேயே எடுத்துக் கொள்ளும்படிக் கூறினான். தனக்கு உதவியதன் காரணத்தையும் அறிய முற்பட்டு, அவனிடம் நேரே கேட்டாள். போவாஸோ உன் பெற்றோரை விடுத்து, சொந்த தேசத்தையும் விட்டு வாழும்,

**'உன் செய்கைக்குத் தக்க பலனைக்**
**கர்த்தர் உனக்கு கட்டளையிடுவாராக'**

எனவும் ஆசிர்வதித்தான். ரூத் எடுத்துக் கொண்டு வந்த அதிக தானியங்களை கண்ட நகோமி இவர்கள் இருவரையும் இணைக்க வேண்டும் என மனதுள் நினைத்துக் கொண்டாள். வயதான காலத்தில் மருமகளை துணையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமில்லாமல், தன் மகள் போல் பாவித்து மறுவாழ்வு பெற ஆசைப்படுகிறாள். அதனை ரூத்திடம் நேரடியாக கேட்கவே அவளும் மறுப்பேதும் சொல்லவில்லை. ரூத்தின் ஆழ்ந்த அன்பினாலும் பண்பினாலும் கவரப்பட்ட செல்வந்தன் போவாஸ் அவளையே திருமணமும் செய்து கொண்டான். ரூத்திற்கும் போவாசுக்கும் ஆண்மகவு பிறந்தது. அவன்பேர் ஓபேத். தாவீது இவனுடைய பேரன். மத்தேயு எழுதிய இயேசுவின் வம்ச அட்டவணையில் சொல்லப்பட்ட நான்கு பெண்களில் ரூத் ஒருவள்.

மனிதர் மீது இரக்கம் நல்லெண்ணம் ஆகிய கொண்டு விளங்கும் ரூத் மாமி நகோமியிடம் காட்டின அன்பு, ஆண்டவரின் பார்வையில் பெரிதாக பட்டது. அவளின் வாழ்க்கையும் மேன்மையான பண்புகளால் நிறைந்திருந்தது. வீட்டிற்குள்ளே முடங்கி விடாமல் தனக்கு வரும் சோதனைகளைச் சாதனைகளாக்கி வாழும் இப்பெண்கள் நமக்கெல்லாம் முன்மாதிரியாக வாழ்ந்து இருக்கின்றார்கள். எதையுமே சிந்திக்கும் திறன் அறிந்து தூய அன்போடு செயல் படுவோமேயானால் வாழ்வு சிறக்கும் என உணர்த்துகிறது ரூத்தின் வாழ்வு. இத்தகைய தன்மையுடைய மகளிரை விவிலியமானது விளக்கும் போது, சமுதாயத்தினை மேம்படுத்தும் சிறந்த சக்தியாக குடும்ப உறவு உள்ளது என்பதனை அறியலாம். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவும் தூய அன்பு காட்டவும் விவிலியம் குடும்ப உறவுகளின் வழி மனிதனுக்கு வலியுறுத்துகிறது. அவ்வகையில் விவிலியத்தில் காணப்படும் நகோமியும் ரூத்தும் சமுதாயத்தில் புரட்சி பெண்களாக வேருன்றியுள்ளனர் என்பதில் ஐயமில்லை.

•◆•



# 25. இயேசு பெண்களின் வாழ்வுக்கு ஒளிவிளக்கு

**சகோ. முனைவர்**
**தி. நிர்மலா**
முதல்வர்,
ஜெயராஜ் அன்னபாக்கியம்
மகளிர் தன்னாட்சிக் கல்லூரி,
பெரியகுளம்.

**சகோ. முனைவர்**
**அல்போன்சாள்**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை
ஜெயராஜ் அன்னபாக்கியம்
மகளிர் தன்னாட்சிக் கல்லூரி,
பெரியகுளம்.

**அருள்திரு. சே.வின்செண்ட் ராஜா** பி.ஏ., பி.திஎச்.
உதவிப் பங்குத்தந்தை, தூய. பேட்ரிக் ஆலயம், பெரியகுளம்.

**முன்னுரை:**

கடவுளின் படைப்பில் மனிதனுக்கு இணையாகவும் மனித வாழ்வை நிறைவு செய்ய துணையாகவும் இருப்பவள் பெண். பிறந்த ஒரு மனித உயிரின் (குழந்தை) முதல் உறவாக, உணர்வாக, உணவாக, சொல்லாக இருப்பவரும் பெண். இத்தகைய மதிப்பு மிகுந்த பெண்ணினம் சாத்திரங்களின் பெயராலும், சமயங்களின் பெயராலும், தெய்வங்களின் பெயராலும், சரியாக புரிந்து கொள்ளாமையினாலும் இன்று கேவலமாக இழிவுபடுத்தப்படுகின்றனர்.

எச்சரிக்கை! கோவிலின் உள்ளே
போட்டோ எடுக்கக் கூடாது.
பெண்களும், நாய்களும்
பிரவேசிக்கக் கூடாது!
மிதியடிகளை அணிந்து செல்லக் கூடாது!
மீறினால் தண்டனைக்குள்ளாவீர்கள்!

இது கரிகாலன் காலத்து கல்தூணில் பொறிக்கப்பட்ட தேவ வசனமல்ல. ஹரியானா மாநிலத்தில் உள்ள சந்திர காளி அம்மன் கோவிலின் வளாகத்தில் இன்றும் காணப்படும் எச்சரிக்கை பலகை[1] இந்த நவீன நூற்றாண்டிலும் பெண்கள் இவ்வாறு பார்க்கப்பட்டார்கள் என்றால் 2000-ஆம் ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு வாழ்ந்த காலத்தில் பெண்களின் நிலை எப்படி இருந்தது. இத்தகைய பெண்களுக்கு இயேசு எப்படியெல்லாம் ஒளிவிளக்காக இருந்து அவர்களின் வாழ்வுக்கு உறுதுணையாக இருந்தார் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**இயேசுவின் காலத்தில் பெண்களின் நிலை:**

இயேசு கிறிஸ்து பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, போதித்து, இறந்து, உயிர்த்த நாடு பாலஸ்தீன் நாடு. இந்த பாலஸ்தீன் நாட்டை யூதர்கள்,

இஸ்ரேல் நாடு என்றும் கிறிஸ்தவர்கள் புனித நாடு என்றும், அராபியர்கள் பாலஸ்தீனா என்றும் அழைக்கின்றனர். பாலஸ்தீனாவின் வடக்கே லெமனான் மலைத் தொடரும், தெற்கே இதுமேயா பாலைவனமும், மேற்கே மத்திய தரைக்கடலும், கிழக்கே அரேபியா பாலைவனமும் அரண்களாக அமைந்துள்ளது. இயேசுவின் காலத்தில் இப்பகுதிகளில் வாழ்ந்த பெண்கள் குடும்பத்தில், சமூகத்தில், சமயத்தில் எத்தகைய நிலையை பெற்றிருந்தனர் என இப்பகுதியில் பார்ப்போம்.

### 1.1 குடும்பத்தில் பெண்களின் நிலை:

இயேசு காலத்து யூதக் குடும்பத்தில் தந்தை தான் குடும்பத்தின் தலைவன். அவனது மனைவியே அவனைத் "தலைவா" அல்லது "ஆண்டவனே" என்று பொருள்படும் 'baal' அல்லது 'adon' என்றுதான் அழைப்பாள். பொதுவாக நாம் தாய் நாடு, தாய் வீடு என்று அழைக்கின்றோம். இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனாவில் "தந்தை வீடு" என்றுதான் அழைப்பார்கள்.

குடும்பத்தில் முதல் குழந்தை ஆணாகப் பிறக்க வேண்டும் என்ற மிகுந்த ஆசை யூதர்களிடையே நிலவியது. பெண் பிறந்து விட்டால் பக்கத்தில் வாழ்பவர்கள் அப்பெற்றோருக்குத் தங்கள் வருத்தத்தைக் கூறுவதும் வழக்கத்தில் இருந்தது. தால்மூட் என்ற யூத சட்டத் தொகுப்பு நூல் "பெண் குழந்தைகள் வெறும் அலங்காரங்கள். அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியவர்கள்" [2] என்று கூறுகிறது. யூதர்களின் அருகில் வாழ்ந்த எகிப்தியர், கிரேக்கர், உரோமையர் போன்றோரின் பெண்களைக் குறித்த எண்ணம் இதைவிடக் கொடுமையாகவே இருந்தது. தனக்குக் குழந்தை பிறந்துள்ளது என்ற செய்தி கேட்ட ஓர் எகிப்திய தந்தை தன் மனைவிக்கு இவ்வாறு எழுதினான் "ஆண் பிள்ளையாக இருந்தால் அதனை வளர்த்து வா, பெண் பிள்ளையாக இருந்தால் கொன்று விடு". இவ்வார்த்தைகள் ஒரு பெண் குழந்தையின் உயிரும், அதன் இருப்புநிலையும் தேவையற்றது என்பதைக் காட்டுகிறது.

கிம்கித் என்ற பெண் தன் வீட்டினுள்ளும் கூட தன் வாழ்நாளில் ஒருமுறை கூட தலைமுக்காடும் முகத்திரையும் அணியாமல் இருந்தது இல்லை. "என் தலைமுடியை என் வீட்டின் உத்திரம் பார்த்தால் என்மேல் அத்தனை சாபமும் வரட்டும்" என்ற யூதர்களின் செபப் புத்தகமான மினாவில் பெண்களின் தலைமுடியை பற்றிய பகுதியே இப்பெண்ணை இவ்வாறு வாழச் செய்தது.[3] பெண்கள் குடும்பத்தில் ஆண்களோடு வாழ்ந்தாலும் இரண்டாம் தரமாக மட்டுமல்ல தரக்குறைவாகவும் பார்க்கப்பட்டனர் என்பது தெளிவாகிறது.



### 1.2 சமய வாழ்வில் பெண்களின் நிலை:

முதல் நூற்றாண்டில் யூத சமய ஆண்கள், யூத ராபிகளின் போதனைகளை பின்பற்றி, காலையில் கடவுளுக்கு நன்றியறியல் கூறியபோது, தன்னை ஒரு அடிமையாகவோ, பிறவினத்தானாகவோ, நாயாகவோ, பெண்ணாகவோ கடவுள் படைக்காததற்கு நன்றி கூறுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தனர்.(4) இது இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பெண்களின் சமய வாழ்வின் பங்கேற்பையும், அவர்களின் அவல நிலையையும் பிரதிபலிக்கிறது.

தோரா என்று அழைக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு முதல் ஐந்து நூல்கள் அடங்கிய புத்தகத்தைத் தொடுவதற்கு பெண்ணை அனுமதிப்பதைவிட அப்புத்தகத்தையே எரித்துவிடுவது மேல் என்று யூத ஆண்கள் கருதினர். ஒரு ஆண் தன் மகளுக்கு தோராவில் அடங்கிய சட்டங்களைக் கற்றுக் கொடுப்பதை விட, விபச்சாரம் செய்ய அவளுக்குக் கற்றுக் கொடுப்பது மேல் என்று எண்ணினர். இதனால் சட்டங்கள் போதிக்கப்படும் பாடசாலைகளில், பெண்களை அனுமதிக்கவில்லை. செபக்கூடத்தில் இருபகுதிகள் இருந்தன. முதல் பகுதியில் நடைபெற்ற திருவழிபாட்டுச் சடங்குகளில் மட்டுமே பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். இரண்டாம் பகுதியில் நிகழும் மறைநூல் ஆசிரியரின் போதனைக்கு பெண்கள் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டது. அதில் ஆண்கள் மட்டுமே பங்கேற்றனர்.

எருசலேம் ஆலயத்தில் பெரும்பாலான பகுதிகளுக்குள் பெண்கள் நுழையக் கூடாது என்ற ஒழுங்கையும் விதித்தனர். அவர்களின் மாதவிலக்குச் சமயத்திலும், ஆண் குழந்தையை பெற்றெடுத்த எட்டு நாட்களுக்குள்ளும், பெண்குழந்தையை பெற்றெடுத்த நாற்பது நாட்களுக்குள்ளும் ஆலயத்தின் புறவினத்துப்பெண்கள் முற்றத்தில் கூட பெண் நுழையக் கூடாது என்று அறிவுறுத்தினர். ஆலயத்தில் பலி ஒப்புக்கொடுக்கப்படும் பலிப்பொருள் மீது ஒரு பெண் தன் கைகளை விரித்துச் செபிக்க ஆண்கள் வழக்கமாக்கவில்லை. யூதர்களின் முக்கிய திருவிழாக்களான பாஸ்கா திருவிழா, கூடாரப் பண்டிகை, பெந்தகோஸ்தே விழா, உடன்படிக்கைத் திருவிழா போன்ற விழாக்களின் போது பெண்கள் எருசலேமுக்குத் திருப்பயணம் செய்யத் தேவையில்லை என்று கூறப்பட்டது. இவ்வாறு சமய வாழ்விலும் பெண்கள் இயேசுவின் காலத்தில் தனித்தன்மையும், உரிமையும் இழந்திருந்தனர்.

### 1.3 சமுதாயத்தில் பெண்களின் நிலை:

இயேசுவின் காலத்திலும் அதற்கு முன்பும் யூதச் சமுதாயத்தில் ஆணுக்கு இருந்த உரிமைகளும், கடமைகளும் பெண்களுக்கே இல்லை என்று கீழ்க்காணும் கருத்துகளிலிருந்து வெள்ளிடைமலை.

- ஒரு பெண் தனது பன்னிரெண்டாம் வயது வரை எதையும் தன்னுடையது என்று சொந்தம் கொண்டாட முடியாது. அவளது உழைப்பின் பயன்கள் யாவும் அவளது தந்தைக்கே உரியது.
- ஓர் அடிமையை உரிமையாக்கிக் கொள்வது போன்றே ஒரு பெண்ணை மனைவியாக்கிக் கொள்வதையும் கருதினர்.
- யூதச் சமுதாயத்தில் மனைவி தன் கணவனுக்கு இரண்டு காரணங்களுக்காகப் பணிந்து நடக்கக் கட்டாயப்படுத்தப்பட்டாள்.

1. யூதச் சமுதாயத்தில் ஒருவன் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம். அதனால் மனைவி தனது கணவனின் வைப்பாட்டிகளை பொறுத்துக் கொள்ள வேண்டும். மி'னா சட்டப்படி ஒரே அரசன் 18 பெண்கள் வரை மணந்து கொள்ளலாம்.
2. மணவிலக்கு அளிக்கும் உரிமை கணவனுக்கே இருந்தது. மனைவிக்கு இல்லை.

- பெண்கள், ஆண்களுடன் சரிநிகராக அமர்ந்து உண்ணக்கூடாது.
- தன் மனைவியாக இருந்தாலும் ஒரு யூதன் ஒரு பெண்ணோடு தெருவில் நின்று பேசக் கூடாது.
- பெண்கள் பொதுவாகப் பொய் பேசக்கூடியவர் என்ற கருத்து யூதரிடையே நிலவியதால் அவர்களின் சாட்சியம் நீதிமன்றங்களில் ஏற்கப்படுவதில்லை.
- பொதுப்பிரச்சினை பற்றி விவாதிக்க கூடியிருக்கும் கூட்டத்திற்கு வந்திருக்கும் பெண்களை கணக்கில் சேர்ப்பதில்லை.
- சொத்துரிமையில் பெண்ணுக்கு பங்கில்லை. அப்படி வேண்டுமென்றால் ஆண்வாரிசு இல்லாத குடும்பத்தில் பிறந்திருந்தால் பெண்ணுக்கு அந்த வாய்ப்பு தரப்பட்டது. (எண்ணிக்கை 27:8)

## 2. பெண்களின் வாழ்வை ஒளிர்வித்த இயேசு:

"உலகின் ஒளி நானே, என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார், வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" (யோவான் 8:12) என்று மொழிந்த இயேசு அதைத் தனது வாழ்வில் நிறைவேற்றினார். யூதர்களின் பாரம்பரிய ஆணாதிக்கச் சட்டத்தால், தூய்மைச் சடங்கின் கொடுர கொள்கையால், தந்தை வழி சமூகத்தின் அதிகாரத்தால் பெண்கள் உடமையை, உரிமையை, உணர்வை, மனித உறவை இழந்து பொழிவில்லாமல் இருளில் வாழ்ந்தனர். இத்தகைய இருள் சூழ்ந்த பெண்ணினத்தை இயேசு தனது உடனிருப்பால், உரிமை வாழ்வால், நல்லுறவால், நலமான உரையாடலால் ஒளிர்வித்த அற்புத நிகழ்வை இப்பகுதியில் காண்போம்.



### 2.1 வேதபோதனை பெற உரிமை

இயேசுவின் காலத்தில் யூதப் பெண்களின் கல்வி என்பது விருந்தோம்பல், வீட்டுக்குத் தேவையானவற்றை கையால் நெய்தல், எண்ணெய் தயாரித்தல், பிள்ளைகளை பேணுதல் போன்ற வீட்டு வேலைகளைக் கற்பது ஆகும்.

மறைநூல் அறிஞரின் போதனையைக் கேட்பதும், தோராவைப் படிப்பதும், அதனுடைய சட்டங்களின் ஆழ்ந்த அறிவைப் பாடசாலைகளில் சென்று கற்பதும் பெண்களுக்குத் தடை செய்யபட்டது. இத்தகைய குறுகிய, ஆண் ஆதிக்க யூத அடக்குமுறையை இயேசு பெத்தானியாவில் வாழ்ந்த மரியா என்ற பெண் வழியாக உடைத்தெறிந்தார்.

இயேசு பெத்தானியாவில் வாழ்ந்த இலாசரின் சகோதரிகளான மார்த்தா, மரியா வீட்டிற்குச் சென்றபோது மார்த்தா யூத முறைப்படி விருந்தினரான இயேசுவைக் கவனிப்பதில் அதிக ஈடுபாடு கொண்டதோடு மட்டுமல்லாமல், இயேசுவின் காலடியில் அமர்ந்து இயேசுவின் மறைபோதனையைக் கேட்ட மரியாவைத் தனக்கு உதவி செய்ய அழைத்தாள். விருந்தோம்பல், சமைத்தல், பணிவிடை புரிதல்தான் பெண்களின் கடமை, போதனை கேட்பதல்ல என்ற யூத ஆண்களின் சிந்தனை மார்த்தாவிடம் வெளிப்பட்டதை அறிந்த இயேசு சமையல், விருந்தோம்பல், கல்வி மட்டுமல்ல, எல்லா வகையான உலகக் கல்வியையும் மரியாவைப் போன்று பெற்றுக் கொள்ள ஆர்வம் வேண்டும் என்பதை வெளிப்படுத்த இயேசு மார்த்தாவிடம் "மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்து கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது (லூக்கா 10:42)" என்றார். இதன்மூலம் வேத போதனை கேட்கும் உரிமை பெண்களுக்கு உண்டு என ஆதரிக்கின்றார்.

### 2.2 நற்செய்திப் பணிக்கானத் தகுதி:

பொது இடங்களில் யூத ராபி ஒரு பெண்ணுடன் பேசுவது குற்றம். அப்படி ஒரு யூத ராபி பேசினால் அது அவரது ஆன்மீக வாழ்வுக்கு இழுக்காகக் கருதப்பட்டது. இத்தகைய சூழலில் இறையியலையும், மோசேயின் திருச்சட்டத்தையும் நன்கு அறிந்தவரும், "நல்ல போதகரே", "ரபி" என மக்களால் அழைக்கப்பட்டவருமான இயேசு யூதர்களால் பாவியாக ஒதுக்கப்பட்ட இனமாக கருதப்பட்ட சமாரியப் பெண்ணிடம் கடவுளைப் பற்றியும், அவளது முன்னோர்களது ஆன்மீக வாழ்வையும், வழிபாட்டு முறைகளைப் பற்றியும் இயேசு உரையாடினார். உண்மையான கடவுளை மீட்பரை பிறருக்கு அறிவிக்கவும் அவரை உற்சாகப்படுத்தினார். இவ்வாறு பெண்களும் பெண்களும் நற்செய்திப் பணி செய்யத் தகுதியுடையவர்கள் என்ற சிறந்த திருத்தூதர்களின் அங்கீகாரத்தை இயேச பெண்களுக்குத் தந்துப் பெருமைப்படுத்தினார்.

## 2.3 திருமணத்தில் ஆண், பெண் சமத்துவம்:

யூதச் சமுதாயத்தில் பெண்கள் தங்களின் கணவனுக்குப் பணிந்தும், கவனமாகப் பணிவிடைப் புரிந்தும் வந்தனர். காரணம் ஒரு கணவன் தன் மனைவியை ஏதாவதொரு குறை கூறி விவாகரத்து செய்துவிடுகின்ற கடினமான ஆண் ஆதிக்கச் சட்டங்கள் இருந்தன. எபிரேயர்களிடத்தில் சமாயி, ஹலால் என்ற சட்டத் தொகுப்புகள் உள்ளன.

- சமாயின் சட்ட ஒழுங்குப்படி, ஒரு பெண் விபசாரத்திலோ அதற்கு நிகரான வேறு குற்றத்திலோ பிடிபட்டால் விவாகரத்து செய்யப்படும்.
- ஹலால் சட்ட ஒழுங்குப்படி, சிறிய காரணத்திற்கும் (எ.கா.) மனைவி உணவை சரியாகச் சமைக்காதது அல்லது கணவன் மற்றொரு பெண்ணை விரும்புவது போன்றவற்றிற்கும் மனைவியை விலக்கிவிடலாம்.

ஆணுக்கு ஒரு சட்டமும், பெண்ணுக்கு ஒரு சட்டமும் உள்ள அநீதியான யூதச் சட்டத்தை இயேசு போதிக்கும் போது படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களை படைத்தார். "கடவுள் இணைத்த இந்த திருமண உறவை, வாழ்வை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் விபச்சாரம் செய்கிறான்" (மாற்கு 10:11) என்றும் "ஒரு பெண்ணை இச்சையுடன் ஒருவன் நோக்கினாலே அவளோடு விபச்சாரம் செய்தவன் ஆகிறான்" (மத் 5:28) என்றும் ஆண்களை எச்சரித்தார். இவ்வாறு இயேசு திருமணத்தின் உன்னத உறவை ஆண், பெண் இருவருக்கும் சமமாக வைத்தார். பெண்ணின் கற்பையும் மகிமைப் படுத்தினார்.

## 2.4 பெண்ணின் சாட்சிக்கு உயரிய அங்கீகாரம்:

பெண்களின் சாட்சியம் யூத, உரோமை சமூகத்தில் நீதி மன்றங்களில் ஒரு பொருட்டாகவே ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால், பெண்கள் பொய் சொல்வார்கள் என்ற தவறான கொள்கை நிலவியது. இந்நிலையை இயேசு உணர்ந்தவராய் இருந்ததார். பெண்களும், அவர்களின் வாய்மொழி சாட்சியங்களும் மதிக்கப்பட வேண்டும், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகத் தனது உயிர்ப்பின் முதல் சாட்சியாக இருக்கும் பேற்றினை மகதலா மரியாவுக்கு கொடுத்தார். தொடர்ந்து அந்தச் சான்று உண்மையானது என்பதை உறுதி செய்ய இயேசு மகதலா மரியாவை தன்னுடைய சீடர்களுக்கு அதை அறிவிக்கப் பணிக்கிறார். இவ்வாறு இயேசுவின் உயிர்ப்புக்கு உயிருள்ள உண்மையான சாட்சியாகப் பெண்ணினத்தைத் தேர்ந்தெடுத்து உயரிய அங்கீகாரம் கொடுத்தார்.



## 2.5 பெண்ணின் வாழ்வுநிலை முக்கியப்படுத்துதல்:

யூதர்கள் பெண்களை இரண்டாம் தரமானவளாக, இழிவானவளாக, அடிமையாக, உடைமைப் பொருளாக, தீட்டானவளாக, பொய் சொல்பவளாக, பாவத்தைக் கொணர்ந்தவளாகவே பார்த்தனர். ஆனால், இயேசு பெண்களைத் தனது வாழ்வின் முக்கிய அங்கமாகவே ஏற்றுக்கொண்டு அவர்களது வாழ்வுநிலைக்கு முக்கியத்துவமும், உறுதுணையும் கொடுத்தார். தனது வாழ்வில் ஒருமுறை கூடப் பெண்களைக் கேவலமாகக் கேடு வார்த்தைகளால் இயேசு எச்சரிக்கவில்லை. மாறாக, அவர்களது சூழ்நிலை சமுதாயத்தில், குடும்பத்தில், சமயத்தில் கீழானதாக இருந்ததைப் பார்த்து அவர்களுக்கு உரிமை வாழ்வும், உடனிருப்பும் உற்சாகமும் தரக்கூடிய விவிலியத்தின் பல்வேறு பக்கங்களும் அவரது வாழ்க்கை அனுபவத்திலிருந்து சான்று பகர்கின்றது.

- பெண்கள், ஆண்களுக்கு பணிவிடை புரியவும், பராமரிக்கவும் பிறந்தவர்கள் என்ற நிலையை மாற்றி ஆண்களும், பெண்களுக்கு பணிவிடை புரியவும், பராமரிக்கவும் கடமை உள்ளவர்கள் என்பதை இயேசு தனது முதல் சீடர் பேதுருவின் மாமியாரின் வீட்டிற்குச் சென்று சந்தித்து குணப்படுத்துவதன் மூலம் உறுதி செய்தார்.(லூக். 5:38-39)
- யூதச் சட்டத்தின்படி இறந்தவர்களை ஒருவர் தொட்டால் எழு நாட்கள் தீட்டுப்பட்டிருப்பான் (எண். 19:11-12). ஆனால், இயேசு கைம்பெண்ணின் சூழலையும், இழப்பின் வேதனை ஒரு பெண்ணிற்கு எவ்வளவு பாதிப்பைத் தரும் என்பதை உணர்ந்து துன்பத்தில் ஆறுதலாகவும், ஏன் இறந்த உடலையும் தொட்டுத் தூக்கி புதுவாழ்வு தந்தார் (லூக். 12:49-56). (லூக். 7:11-17).
- விதவைகளின் உணர்வை இயேசு ஆழமாகப் புரிந்திருந்ததால் தனது இறப்பின் போது தனது தாயைத் (பெண்ணை) தனியாக விட்டுச்செல்லாமல் தனது அன்புச்சீடர் யோவானிடம் அவரைப் பராமரிக்க ஒப்படைக்கிறார் (யோவான் 19:26-27)
- தனது போதனைகளில், மறையுரைகளில் கடவுளின் விண்ணகத் தன்மைகளை பெண்களின் செயல்கள் (புளிப்பு மாவு, காணாமல் போன திராக் மாவைத் தேடும் பெண், நீதிக்காக போராடும் கைம்பெண்) வழியாகக் காட்டுகிறார். (மத். 13:33, லூக். 15:8-10, லூக். 28:1-8).
- பெண்களின் மாதவிடாய் தீட்டு என கருதிய யூதச் சமூகத்தில் 12 ஆண்டுகளாய் மாதவிடாயால் துன்பம் அடைந்த பெண் தன்னைத் தொட அனுமதி தருகிறார். பெண்ணின் மாதவிடாய் அசிங்கமானதோ, தீட்டோ அல்ல அது உயிரை உருவாக்கும் தன்மை உள்ளது என்பதை உணர்த்தினார். பெண்ணின் மாண்பை அனைவரின் முன்னும் அங்கீகாரம் செய்தார் (லூக். 8:43-48).

- பாலியல் ரீதியாக எந்தச் செயலையும் (குறிப்பாக பலதார மணம், விபச்சாரம்) ஆண் செய்தால் பெருமை, வலிமை என்றும் அதே செயலைப் பெண் செய்தால் பாவம், பலவீனம் தண்டிக்கப்பட வேண்டும், தீட்டுக் கழிக்கப்பட வேண்டும் என்ற அராஜக ஆண் ஆதிக்க தீர்ப்பை இயேசு "உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்" என்று கூறுவதன் வழியாகக் கற்பை இருவருக்கும் பொதுவானதாக வைத்தார். (யோவான் 8:3-8).

### முடிவுரை :

யூத சமுதாயத்தில் பெண்களுக்கு எதிராக இருந்த அனைத்து உரிமை மீறல்களையும் இயேசு எதிர்த்து அவர்களின் உரிமைகளைத் தனது செயல்பாட்டால் பெற்றுத் தந்ததன் விளைவாக இயேசுவுக்குப் பின் கத்தோலிக்கத் திருச்சபையில் பெண்களின் மாண்பு வெகுவாகப் போற்றப்பட்டது.

- இன்று பெண்கள் இறையியலைக் கற்க, போதிக்க, சான்று பகர அனைத்து உரிமைகளும், கடமைகளும் உண்டு.
- திருமணத்தில் இன்பத்திலும், துன்பத்திலும், உடல் நலத்திலும், நோயிலும் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாக, நேர்மையாக இருக்க வாக்குறுதி எடுக்கப்படுகிறது.
- திருவருட்சாதனங்களில் பெண்களும் சாட்சிகளாக இருக்க அனுமதி வழங்கப்படுகிறது.
- பங்கின் அமைப்புகளிலும், திருவழிபாட்டு கொண்டாட்டங்களிலும் பெண்களின் பங்கேற்பு இன்று வெகுவாக உற்சாகப்படுத்தப்படுகின்றது.

### அடிக்குறிப்புகள்

1. சகோ. மெட்டி, "இயேசு ஒரு பெண்ணியவாதி", பரிமாணங்கள், தொகு. சிரில் (திண்டுக்கல்: வைகறைப் பதிப்பகம், 2000), பக். 125.
2. பீட்டர் அபீர் மற்றும் அலோசியஸ் சேவியர், திருவிவிலிய விளக்கம் ஓர் அறிமுகம் (திருச்சி, அருள்வாக்கு மன்றம், 2005) பக். 77).
3. பீட்டர் அபீர் மற்றும் அலோசியஸ் சேவியர், திருவிவிலிய விளக்கம் ஓர் அறிமுகம் (திருச்சி, அருள்வாக்கு மன்றம், 2005) பக். 142).
4. தாசன் வி.மா., நற்செய்தி அறிவிப்பா? நலிந்தோர் பணியா? (திண்டுக்கல், வைகறைப் பதிப்பகம்) பக். 35.

•◆•



# 26. கன்னிமரிபிள்ளைத் தமிழில் அன்னை மரியின் வருணனை

முனைவர் தே. ராஜசீலி
உதவிப் பேராசிரியை,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம்

### முன்னுரை

கிறித்தவத் இலக்கியத்தில் அன்னை மரிய பற்றிய வருணனைகள் அதிகமாகவே இடம் பெற்றுள்ளன. ஒரு பெண் தானும் வாழ்த்தி பிறரையும் வாழ வைக்கிறாள். எனவே இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி தான் என்றாலும் இக்கட்டுரை வழி மிகத் தெளிவாக அன்னை மரியின் பண்பு நலன், உதவும் பாராட்டும், உலகிற்கு வெளிப்படும் திறன் ஆகியவை எல்லாம் போற்றத்தக்கவை ஆகும்.

### மரியன்னையைப் பற்றிய வருணனை

மரியன்னை இயேசுநாதரின் தாயாக விளங்குகிறாள். அமல உற்பவியாகப் பிறந்து மாதர்குல மாணிக்காய் வாழ்ந்து இறைமகனைத் தம் திருவயிற்றில் தாங்கியதால் அவள் தெய்வத் தாயாகவும் உயர்ந்து காணப்படுகிறாள்.

தமிழகத்தில் வேளாங்கண்ணி, பூண்டி ஏலாக்குறிச்சி, தூத்துக்குடி, கொடைக்கானல், வில்லியநல்லூர், திண்டுக்கல் அருகே உள்ள வாடிப்பட்டி போன்ற சில இடங்களில் எழுந்தருளியுள்ள அன்னை மரியன்னையைச் சமய வேறுபாடின்றிப் பிற சமயத்தவரும் சென்று வழிபட்டு எல்லா நலமும் வளமும் வாய்க்கப் பெற்றுச் சிறந்து விளங்குவது அவளுடைய தனித்தன்மையாகிறது. அத்தகு தனித்தன்மை கொண்ட மரியன்னையைக் கிறித்தவச் சிற்றிலக்கிய ஆசிரியர்கள் பல்லாற்றாலும், போற்றி பரவிப் பல்வகைச் சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளனர். அவை வழி மரியன்னையின் உருவச் சிறப்பும், பண்பு நலனும் வெளிப்படுகின்றன.

### உருவ வருணனை

மரியன்னை தெய்வநலம் சான்ற மங்கையாக விளங்கினாள் என்னும் அவள் தம் கணவனாகக் கொண்ட வளன் என்னும் சூசை ஏவிய பணிபுரிந்து வாழ்ந்தாள். இறை மைந்தனைத் தம் தோள்களில் சுமந்தாள். ஒளி தவழும் புருவங்களையும், கருணை பொழியும் வழிகளையும், முடியுனைந்த சென்னியையும் தவமே புரியும் திருமேனியையும் பெற்றிருந்தாள் என்று சூ.தாமஸ் கூறுகிறார்.